2025 நவம்பர் மாதம் 06 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 79/2021

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 – ஆம் தேதி வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – சண்முகசுந்தரம் |
| தந்தை பெயர்: | ராமசாமி செட்டியார் |
| ஊர்: | பொள்ளாச்சி |
| வட்டம்: | பொள்ளாச்சி |
| மாவட்டம்: | கோயம்புத்தூர் |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 73 |

06.11.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் 1ம் வாதியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 15.07.1994 ம் தேதியிட்டு எனக்கும் 2 ம் வாதிக்கும் பரமசிவம் என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.1446/1994) – **வா.சா.ஆ.1** |
| 2. | 10.08.2015 ம் தேதியிட்டு நானும், 2 ம் வாதியும் சேர்ந்து 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு பொது அதிகார ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.3712/2015) – **வா.சா.ஆ.2** |
| 3. | 27.03.2018 ம் தேதியிட்டு எங்களின் பவர் ஏஜெண்ட் நிலைமையில் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.1354/2018) – **வா.சா.ஆ.3** |
| 4. | 15.02.2021 ம் தேதியிட்டு நானும் 2 ம் வாதியும் சேர்ந்து எங்களின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல், இரண்டு அசல் அஞ்சலக இரசீதுடன் – **வா.சா.ஆ.4** |
| 5. | 25.02.2021 ம் தேதியிட்டு நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 1 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சலக உறை அசல் – **வா.சா.ஆ.5** |
| 6. | 25.02.2021 ம் தேதியிட்டு நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சலக உறை அசல் – **வா.சா.ஆ.6** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**:– பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.11.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.11.06 18:17:09 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
06.11.2025.